**மேட்டூர் அணை நீர்மட்டம் 84.33 அடி**

First Published : 30 Jul 2011 03:11:38 AM IST

சேலம், ஜூலை 29: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 84.33 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 14,369 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து தண்ணீர் விநாடிக்கு 16,001 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. அணையின் நீர் இருப்பு 46.40 டி.எம்.சி.

**நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 26 சதவீதம் சரிவு**

ஜூலை 30,2011,00:02



கொச்சி: நடப்பு 2011-12ம் நிதியாண்டின், முதல் காலாண்டில், நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 26 சதவீதம் சரிவடைந்துள்ளது.

இருப்பினும், மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 21 சதவீதம் உயர்ந்துள்ளது.

மொத்த நறுமணப் பொருட்கள் ஏற்றுமதியில், மிளகாய் வற்றல் ஏற்றுமதி, மூன்றில் ஒரு பங்கு என்ற

அளவில் உள்ளது.

இதன் ஏற்றுமதி, நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், கடந்த நிதியாண்டின், இதே காலாண்டை விட, 30 சதவீதம் குறைந்து போயுள்ளது.இதன் காரணமாகவே, நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் குறைந்து போயுள்ளதாக, ஆய்வில் தெரிய வந்துள்ளது. இருப்பினும், இக்காலாண்டில், மிளகு, இஞ்சி, புதினா மற்றும் புதினா பொருட்கள் விலை, சர்வதேச சந்தையில் உயர்ந்ததையடுத்து, மதிப்பின் அடிப்படையிலான ஏற்றுமதி, உயர்ந்துள்ளதாக நறுமணப் பொருள் வாரியம் தெரிவித்துள்ளது.

முதல் காலாண்டில், மிளகு ஏற்றுமதி இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. மேலும், இதன் விலையும், சிறப்பான அளவில் உயர்ந்துள்ளது. கணக்கீட்டுக் காலத்தில், இஞ்சி விலையும் பன்மடங்கு உயர்ந்திருந்தது. ஆனால், சிறிய வகை ஏலக்காய் விலை குறைந்திருந்தது.மொத்த நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி மதிப்பில், நறுமண எண்ணெய், ஓலியேரெசின் மற்றும் புதினா பொருட்களின் பங்களிப்பு, 30 சதவீதப் பங்களிப்பைக் கொண்டுள்ளது. இவற்றின் விலையும், ஏற்றுமதியும் அதிகரித்ததையடுத்து, நறுமணப் பொருட்களின் ஏற்றுமதி மதிப்பு உயர்ந்துள்ளது.நடப்பு நிதியாண்டின், முதல் மூன்று மாதங்களில் (ஏப்ரல்-ஜூன்), நாட்டின் ஒட்டுமொத்த நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி, 1 லட்சத்து 16 ஆயிரத்து 900 டன் என்ற அளவில் இருந்தது. இது, கடந்த நிதியாண்டின், இதே காலாண்டில், 1 லட்சத்து 57 ஆயிரத்து 850 டன்னாக உயர்ந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதேசமயம், இதே காலாண்டுகளில், மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 1,560.47 கோடி ரூபாயிலிருந்து (34.29 கோடி டாலர்), 1,885.24 கோடி ரூபாயாக (42.16 கோடி டாலர்) அதிகரித்துள்ளது.கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொண்ட காலாண்டுகளில்,ஒரு கிலோ புதினா மற்றும் புதினா பொருட்களின் மதிப்பு 688 ரூபாயிலிருந்து, 1,180 ரூபாயாகவும், ஒரு கிலோ நறுமண எண்ணெய் மற்றும் ஓலியோரெசின் மதிப்பு 50 சதவீதம் உயர்ந்து, 1,117 ரூபாயிலிருந்து, 1,653 ரூபாயாகவும் அதிகரித்திருந்தது.

**பயிர் சாகுபடி பரப்பு பட்டியலிடும் பணி**

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2011,00:06 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி தாலுகாவில் பயிர் சாகுபடி பரப்பு குறித்த புள்ளிவிபரங்களை பட்டியலிடும் பணி நடந்தது. புள்ளியியல் துறை அதிகாரிகள் கூறியதாவது:பொள்ளாச்சி தாலுகாவில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விவசாய நிலத்தின் பரப்பு, பயிர் சாகுபடி, அவற்றின் வளர்ச்சி நிலவரம், மகசூல் தன்மை போன்றவற்றை கிராம நிர்வாக அலுவலரும், அந்தந்த துறை அதிகாரிகளும் இணைந்து ஆய்வு செய்து பட்டியல் தயாரிக்கின்றனர். ஒவ்வொரு மாதமும் 25ம்

தேதி, வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் கிராமங்களை ஒருங்கிணைத்து புள்ளிவிபரங்களை தயார் செய்கின்றனர். அதையடுத்து 28ம் தேதி தாலுகா அலுவலகத்தில் அனைத்து அதிகாரிகளும், கிராம நிர்வாக அலுவலர்களும் கொடுக்கும் அறிக்கையை கொண்டு விவசாய நிலம் மற்றும் சாகுபடி குறித்த புள்ளி விபரங்கள் தயாரிக்கப்படுகிறது. இந்த விபரங்கள் ஒவ்வொரு மாதமும் மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பப்படும்.கடந்த மாதத்துடன் ஒப்பிடும் போது பருவ மழை பெய்துள்ளதால் விவசாயிகள் பயிர் சாகுபடியை துவங்கியுள்ளனர். ஆனால், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, விவசாய சாகுபடி பரப்பு கணிசமாக குறைந்துள்ளது என்றனர்.

**மஞ்சள் விலை ஒரே நாளில் ரூ.300 சரிவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2011,00:19 IST

ஈரோடு: ஆடியிலும் நிலை தடுமாறும்படி, ஒரே நாளில் மஞ்சள் விலை ரூ.317 சரிவால், விவசாயிகள் கலக்கம் அடைந்தனர்.ஈரோட்டில் ஒழுங்குமுறை விற்பனை கூடம், வெளிசந்தை, ஈரோடு சொசைட்டி, கோபி சொசைட்டி என நான்கு மஞ்சள் மண்டி உள்ளன.இங்கு வெளிமாநில வியாபாரிகள், உள்ளூர் மஞ்சள் ஏஜென்டுகள் அதிகளவு மஞ்சள் வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது வழக்கம்.கடந்தாண்டு இறுதியில் பெய்த பலத்த மழையால் விளைச்சல் இரு மடங்கானது. தேசிய அளவில் மஞ்சள் பயிரிடும் பரப்பளவு 25 சதவீதம் உயர்ந்ததால், மஞ்சள் உற்பத்தி, இருப்பு அதிகரிப்பால் மஞ்சளுக்கான தேவை குறைந்து, விலை வீழ்ச்சியடைய துவங்கியது.வெளிமாநிலங்களில் மஞ்சள் அதிகமாக இருப்புள்ளதால், வெளிமாநில வியாபாரிகளின் வருகையும் குறைந்துள்ளது.மஞ்சளை கொள்முதலில் ஏற்றுமதியாளர்களுக்கும் ஆர்வம் குறைந்துள்ளது.நேற்று முன்தினம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் குறைந்தபட்சம் ரூ.6,789க்கு விற்றது, ரூ.317 குறைந்து, 6,472க்கு ஏலம் போனது. இனிவரும் காலங்களில் மஞ்சள் விலை உயர வாய்ப்பு குறைவு என்பதால், மஞ்சள் வரத்தும் ஓரளவுக்கு குறைந்தது.நேற்று மார்க்கெட் நிலவரப்படி, ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விரலி ஒரு குவிண்டால் மஞ்சள் குறைந்தபட்சம் ரூ.6,472ல் இருந்து அதிகபட்சமாக ரூ6,986க்கு விலை போனது.கிழங்கு ஒரு குவிண்டால் ரூ.5,690ல் இருந்து ரூ.6,299க்கு ஏலம் போனது. இதில், 1,588 மூடைகள் வரத்தானதில் 1,257 மூடைகள் விற்பனையானது.வெளிசந்தையில் விரலி ரூ.5,236ல் இருந்து அதிகபட்சம் ரூ.7,039க்கும், கிழங்கு ரூ.5,161ல் இருந்து ரூ.6,264க்கும் ஏலம் போனது. இதில், 2,486 மூடைகள் வரத்தானது.ஈரோடு சொசைட்டியில், விரலி ரூ.5,069ல் இருந்து ரூ.7,009க்கும், கிழங்கு ரூ.5,069ல் இருந்து ரூ.6,189க்கும் ஏலம் போனது. இதில், 2,055 மூடை வரத்தானதில், 1,654 மூடைகள் விற்பனையானது.கோபி சொசைட்டியில் விரலி ரூ.5,050ல் இருந்து ரூ.7,050க்கும், கிழங்கு ரூ.5,010ல் இருந்து ரூ.6,369க்கும் ஏலம் போனது. இதில், 227 மூடைகள் வரத்தானதில், 221 மூடைகள் விற்பனையானது.சந்தை மேலாளர் கூறுகையில், ""உள்நாட்டில்

மஞ்சள் இருப்பு அதிகரிப்பு, விளைச்சல் அதிகரிப்பால் விலையும் வீழ்ச்சி அடைகிறது. ஆடி மாதம் மற்றும் பண்டிகை காலங்களில் விலை ஏறுமா? இறங்குமா? என சந்தேகமாகவே உள்ளது," என்றார்.

**கால்நடை கண்காட்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 29,2011,23:38 IST

சென்னை:முதல் மருத்துவப்பள்ளியைத் துவக்கி, 250 ஆண்டுகள் நிறைவடைந்ததை, உலக கால்நடை ஆண்டாக அறிவித்துள்ளனர். அதை கொண்டாடும் வகையில், தமிழக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை சார்பில்,சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நேற்று, அதன் துவக்க விழா நடந்தது.நான்கு நாள் நடக்கும் நிகழ்ச்சியில், செல்லப்பிராணிகள், கால்நடை, பறவைகளின் அணிவகுப்புகள், அபூர்வ விலங்குகள், பறவைகளின் குறும்படங்கள், இறைச்சிக்கான கால்நடைகள் மூலம் ருசியுள்ள உணவுகள் தயாரித்தல் உள்ளிட் பல்வேறு போட்டிகள் நடக்கவுள்ளன.அதில் துவக்க நாளான நேற்று, கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் சிவபதி, கண்காட்சியைத் துவக்கி வைத்து, கோழியின நோய் தொடர்பான குறுந்தகடை வெளியிட்டார்.

**நெல் கொள்முதல் காலக்கெடுவை நீட்டிக்க விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 29,2011,23:31 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நெல் கொள்முதல் செய்ய அரசு நிர்ணயித்துள்ள காலக்கெடுவை நீட்டிப்பு செய்ய வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடந்தது. கலெக்டர் மகேஸ்வரன் தலைமை வகித்தார். டி.ஆர்.ஓ., பிரகாசம், வேளாண் இணை இயக்குன் நாச்சியப்பன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாகராஜன், வேளாண் அலுவலர் பச்சையப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:லோகாபிராம்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் துவரை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானியமாக வழங்கும் உரங்களை உடனடியாக வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.நாச்சியப்பன் (வேளாண் இணை இயக்குனர்): கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 2,000 ஹெக்டேரில் துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், 1,730 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு

உரங்கள் வழங்கப்பட்டு விட்டது. கடந்த சில நாட்களுக்கு முன்பு கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு, 468 டன் உரம் வந்துள்ளதால் மீதமுள்ள, 270 ஹெக்டேரில் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கும் உரங்கள் வழங்கப்படும்.

ராமகவுண்டர்: காவேரிப்பட்டணம் நெல் கொள் முதல் மையத்தில் நாள்தோறும், ஒரு லட்ச ரூபாய்க்கு மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், மாவட்டத்தில் கடந்த போகத்தில் விளைந்த, 10 லட்சம் மூட்டை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அதனால், நாள்தோறும், 2 லட்ச ரூபாய்க்கு நெல் கொள்முதல் செய்யவும், காலக்கெடுவை நீட்டிப்பு செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.ருக்குமணி (பொது விநியோக திட்ட மண்டல மேலாளர்): நெல் கொள்முதலை வரும் 31ம் தேதிக்குள் நிறுத்திவிடும்படி மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், விவசாயிகளிடம் இருந்து தரமான அதாவது, 100 சதவீதத்தில், 67 சதவீதம் அரிசி வரும் வகையிலான நெல்லை மட்டுமே கொள்முதல் செய்ய அரசு அறிவுறுத்தியுள்ளது.கலெக்டர் மகேஸ்வரன்: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதல் செய்யும் காலகெடுவை நீட்டிக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். எனவே, விவசாயிகள் தரமான நெல்லை மட்டும் நெல் கொள்முதல் மையத்தில் விற்பனை செய்யலாம்.வெங்கடசாமி: காவேரிப்பட்டணம் தென்பெண்ணை ஆற்றில் குப்பைகள் குவிந்துள்ளதாலும், சாக்கடை நீர் கழிவுகள் கலப்பதாலும் ஆறு மாசுடைந்துள்ளது. இதனால் காவேரிப்பட்டணத்தில் சுகாதாரமற்ற நிலை உள்ளது.கலெக்டர் மகேஸ்வரன்: காவேரிப்பட்டணம் ஆற்றில் குவித்து வைக்கப்பட்டுள்ள மக்கும் மற்றும் மக்கா குப்பைகளை அகற்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் முன்வந்துள்ளது. மாவட்ட நிர்வாகத்துடன் தொண்டு நிறுவனங்கள் இணைந்து, தென்பெண்ணை ஆற்றை சுத்தப்படுத்தும் பணி விரைவில் தொடங்கப்படும்.ராமகவுண்டர்: ஓசூர் பகுதியில் வங்கிகளில் கடன் வாங்கி பசுமை குடில்கள் அமைத்து விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. சமீபத்தில் ஏற்பட்ட இயற்கை சீற்றம் காரணமாக பல இடங்களில் பசுமை குடில்கள் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும்.

பிரகாசம்(டி.ஆர்.ஓ.,): பசுமை குடில்களை அமைக்க விவசாயிகள் வங்கிகளில் கடன் வாங்கியபோது அதற்கு இன்சூரன்ஸ் செய்திருக்க வேண்டும். இன்சூரன்ஸ் செய்திருந்தால் அதன் மூலம் இழப்பீட்டு தொகை கிடைக்கும். இன்சூரன்ஸ் செய்யாத நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு எந்த வகையில் தருவது என்று அதிகாரிகளுடன் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்.ஜெயலட்சுமி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடைகளை பல்வேறு நோய்கள் தாக்கி வரும் நிலையில், கால்நடை மருத்துவ முகாம்களை அதிக அளவில் நடத்த வேண்டும்.கலெக்டர் மகேஸ்வரன்: தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் உள்ளது போல்

கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் நடமாடும் கால்நடை மருத்துவ வாகனம் மூலம் கிராமங்கள் தோறும் கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்த கால்நடை துறை மூலம் ஏற்பாடு செய்யப்படும்.சரவணன்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்துள்ளனர். இதற்கு முக்கியமாக பயன்படும் பவர் கோணோவீடர் கருவிகளை வட்டாரத்திற்கு, 10 என்ற அளவில் விவசாயிகளுக்கு மானியமாக வழங்க வேண்டும்.நாச்சியப்பன்(வேளாண் இணை இயக்குனர்): கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு, 100 கோணோவீடர் கருவிகள் தேவை என்ற கோரிக்கையை ஏற்று தமிழக அரசு வழங்கவுள்ளது. இதனை, வட்டார அளவில் அனைவருக்கும் பிரித்து மானிய விலையில் வழங்கப்படும்.

**கொப்பரை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2011,03:04 IST

பொள்ளாச்சி : மார்க்கெட்டில் கிராக்கி நிலவுவதால், கொப்பரை விலை உயர்ந்து வருகிறது.காங்கேயம் மார்க்கெட்டில், 23ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவு க்கு 60 - 61 ரூபாய் கிடை த்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு, 1,380, தேங்காய் பவுடர் கிலோவுக்கு, 102 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. பொள்ளாச்சி, உடுமலைப் பகுதிகளில் இருந்து, சென்னை உட்பட பகுதிகளுக்கு அனுப்பும் தேங்காய் டன்னுக்கு, 16 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்பட்டது.

நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு, 63 - 64, தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு, 1,450, தேங்காய் பவுடர் கிலோவுக்கு, 100 ரூபாய் கிடைத்தது. விவசாயிகள் சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் டன்னுக்கு, 17 ஆயிரத்து 500 முதல் 18 ஆயிரத்து 500 வரை கிடைத்தது. காய்ந்த தேங்காய் டன்னுக்கு, 19 ஆயிரத்து 500 கிடைத்தது. பொள்ளாச்சி, உடுமலைப் பகுதிகளில் இருந்து உணவுத் தேவைக்காக அனுப்பும் தேங்காய் டன்னுக்கு, 17 ஆயிரம், விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய்க்கு, 10 முதல் 11 வரையும் கிடைத்தது. வியாபாரிகள் சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள தேங்காய்க்கு, 9 முதல் 10 வரை வழங்கப்பட்டது.

**கரும்புக்கு விலை கிடைக்க நடவடிக்கை :பொதுப்பணித் துறை அமைச்சர் நம்பிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 29,2011,23:54 IST

மடத்துக்குளம் : ""கரும்புக்கு உரிய விலை கிடைக்க, முதல்வர் நடவடிக்கை எடுப்பார்," என, பொதுப்பணித் துறை அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். உடுமலை அருகே, மடத்துக்குளம் கிருஷ்ணாபுரம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், பொன் விழா, சமுதாய நலக்கூடம் திறப்பு, கரும்பு விவசாயிகள், ஆலைத் தொழிலாளர்களுக்கு பரிசளிப்பு என முப்பெரும் விழா நடந்தன.பொதுப்பணித் துறை அமைச்சர் ராமலிங்கம் பேசியதாவது:சிறிய நாடான "கியூபா', சர்க்கரை உற்பத்தியில் முதலாவதாக உள்ளதுடன், சர்க்கரை கிண்ணம் என்ற பெயருடன் விளங்கி வருகிறது. இப்பெயரை தக்க வைத்துக் கொள்ள, அந்நாடு பெரும் சவால்களை சந்தித்து வருகிறது. பெரிய நாடான இந்தியா, அந்த இலக்கை அடைய கடினமாக உழைக்க வேண்டும். விவசாயிகள் நலன் கருதி, கரும்புக்கு உரிய விலை நிர்ணயிக்க, முதல்வர் விரைவில் நடவடிக்கை மேற்கொள்வார். அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள், தொழிலாளர்கள் நலன் காக்க, அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும்.கரும்பு பயிரை காக்க, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கடந்த 5ம் தேதி முதல் 10 நாட்களுக்கு உயிர் தண்ணீர் வழங்கப்பட்டது. மேட்டூர் அணையிலிருந்து, ஜூன் 6ம் தேதியே பாசனத்துக்காக நீர் திறந்து விடப்பட்டது. நடப்பாண்டு, அமராவதி அணையில் போதியளவு நீர் இல்லாததால், ஆகஸ்ட் முதல் நாள், நீர் திறக்க முடியாத நிலை உள்ளது. அணையில் நீர் அதிகரித்ததுடன், முதல்வரின் உத்தரவுப் படி, நீர் வழங்கப்படும். இவ்வாறு, அமைச்சர் ராமலிங்கம் பேசினார்.ஊரக தொழிற்துறை அமைச்சர் சண்முகவேலு பேசுகையில், ""கடந்த ஆட்சியில், குறைந்தளவு விவசாயிகளுக்கு மட்டுமே, ஊக்கத்தொகை வழங்க முடிவு செய்யப்பட்டது. பொன்விழாவை முன்னிட்டு, தற்போதைய ஆட்சியில், சங்கத்திலுள்ள 830 விவசாயிகளுக்கு, தங்கக் காசுகள் வழங்கப்பட்டுள்ளன," என்றார். பொள்ளாச்சி எம்.பி., சுகுமார், எம்.எல்.ஏ.,க்கள் பொள்ளாச்சி ஜெயராமன் (உடுமலை), பொன்னுசாமி (தாராபுரம்), வேணுகோபால் (பழநி), அரசு முதன்மை செயலர் ராஜீவ் ரஞ்சன், தனி அலுவலர் ராமகிருஷ்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**பருத்தி சாகுபடி பரப்பு அதிகரிக்க மத்திய, மாநில அரசுகள் கை கொடுக்குமா?**

பதிவு செய்த நாள் : ஜூலை 29,2011,23:43 IST

உடுமலை : ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தில் பருத்தி சாகுபடியில் முக்கிய பங்கு வகித்த உடுமலை பகுதியில் மீண்டும் சாகுபடி பரப்பு அதிகரிக்க மத்திய பருத்தி கழகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பி.ஏ.பி., மண்டல பாசனம் மற்றும் கிணற்றுப்பாசனத்திற்கு பல ஆயிரம் ஏக்கரில் பருத்தி பயிரிடப்பட்டு வந்தது. ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தில் பருத்தி உற்பத்தியில் இப்பகுதி முக்கிய பங்கு வகித்தது. இந்நிலையில், 1990 ம் ஆண்டு முதல் பல்வேறு காரணங்களால் பருத்தி சாகுபடியில் விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்தனர். செடிகளில்

பரவிய மர்மநோய்களை கட்டுப்படுத்த பல ஆயிரம் ரூபாயை செலவிட்டு; பருத்திக்கு விலை கிடைக்காதது மற்றும் தொழிலாளர் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்தது. பல ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டு வந்த பருத்தி இப்பகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் முற்றிலுமாக காணாமல் போனது. இதனால், சிறு நூற்பாலைகளுக்கு பருத்தி தட்டுப்பாடு ஏற்பட்டது. பல ஆண்டு இடைவெளிக்கு பிறகு மத்திய அரசின் சிறு திட்டம் மற்றும் நூற்பாலை நிர்வாகம் சார்பில் ஒப்பந்த சாகுபடி முறை கொண்டு வரப்பட்டு அதிகபட்சமாக நூறு ஏக்கர் வரை பருத்தி பயிரிடப்பட்டது. பி.ஏ.பி., ஒவ்வொரு மண்டல பாசனத்தின் போதும் குறிப்பிட்ட ஏக்கர் மட்டும் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், கடந்த 2009ம் ஆண்டு நீண்ட இழை பருத்தி ரகங்களை பயிரிட்ட விவசாயிகளுக்கு நல்ல விளைச்சலும், ஓரளவு விலையும் கிடைத்தது. கடந்தாண்டு விருகல்பட்டி மற்றும் சுற்றுப்பகுதிகளில் நீண்ட இழை பருத்தி ரகம் 200 ஏக்கருக்கும் அதிகமாக பயிரிடப்பட்டது. அறுவடையின் போது மத்திய அரசு பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி அளித்தது. இதனால், உள்ளூர் நூற்பாலைகளுக்கு தேவை அதிகரித்து பருத்தியின் விலை கிடுகிடுவென உயர்ந்தது. குவிண்டாலுக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை விலை கிடைத்ததால் விவசாயிகளுக்கு போதுமான லாபம் கிடைத்தது. இந்நிலையில், பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு விரைவில் திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட உள்ளது. பாசனத்திற்கு உடுமலை மற்றும் குடிமங்கலம் பகுதியில் விவசாயிகள் பருத்தி பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆனால், தரமான விதைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் கிடைக்காமல் பருத்தி சாகுபடிக்கு ஆர்வம் காட்டும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நீண்ட இழை பருத்தி ரக விதைகளுக்காக ஆந்திரா உட்பட வெளிமாநிலங்களுக்கு செல்ல வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர். இது போன்ற பிரச்னைகளால் உடுமலை பகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு மீண்டும் அதிகரிப்பது கேள்விக்குறியாக உள்ளது. பருத்தி சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு தொழில் நுட்ப உதவிகள் வழங்கவும் மத்திய ஜவுளி அமைச்சகத்தின் கீழ் மத்திய பருத்தி கழகம் செயல்பட்டு வருகிறது. இந்த கழகத்தின் செயல்பாடுகள் முழுமையாக விவசாயிகளுக்கு நேரடியாக கிடைப்பதில்லை. கடந்த சீசனில் அடிவள்ளி உட்பட சில கிராமங்களில் தொழில் நுட்ப உதவி மையம் துவங்கப்பட்டது. பெயரளவிற்கு நோட்டீஸ்கள் ஒட்டப்பட்டு விவசாயிகளுக்கு எந்த பலனும் இல்லாமல் மையங்கள் காட்சிப்பொருளாக இருந்தன. விவசாயிகளுக்கான ஆலோசனை கூட்டங்களும் பெயரளவிற்கு நடத்தப்பட்டு, கூட்டத்திற்கு 50 ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கியதுடன தங்கள் கடமையை மத்திய பருத்தி கழகத்தினர் முடித்து கொண்டனர். இதனால், விவசாயிகள் கடும் அதிருப்தியடைந்தனர். சாகுபடியின் போது பல்வேறு நோய் தாக்குதல் ஏற்பட்ட போதும் மத்திய பருத்தி கழகம் தேவையான தொழில்நுட்ப உதவிகளை விவசாயிகளுக்கு வழங்கவில்லை. வரும் சீசனில் தரமான விதைகள் கிடைக்கவும், தொழில் நுட்ப கூட்டங்களை முறையாக நடத்தி இடுபொருட்களை மானியத்தில் வழங்கவும் மத்திய பருத்தி கழகம் முன்வர

வேண்டும் என உடுமலை பகுதி விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். வேளாண்துறையும் கண்டுகொள்வதில்லை? மத்திய பருத்தி கழகம் போதுமான நடவடிக்கை எடுக்காத நிலையில் மாநில அரசின் வேளாண்துறை பருத்தி சாகுபடிக்காக எவ்வித பணிகளையும் மேற்கொள்வதில்லை. பல்வேறு சாகுபடிக்கு மானியங்கள் வழங்கப்படும் நிலையில் வேளாண்துறை பருத்தியை கண்டுகொள்வதில்லை. நோய் தாக்குதல் பிரச்னைக்காக விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடும் நிலை உருவானால் மட்டுமே ஆலோசனை கூட்டங்களை வேளாண்துறை நடத்துகிறது. மாநில அரசு வேளாண்துறை சார்பில் பருத்தி சாகுபடிக்கு தேவையான மானியங்களை வழங்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

## *நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 21% அதிகரிப்பு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*கொச்சி*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில், இந்தியாவின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி, ரூபாய் மதிப்பின் அடிப்படையில், சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டைக் காட்டிலும் 21 சதவீதம் அதிகரித்து ரூ.1,560.47 கோடியிலிருந்து*

ரூ.1,885.24 கோடியாக உயர்ந்துள்ளது.

அளவு அடிப்படையில்...

அதேசமயம், அளவின் அடிப்படையில் ஏற்றுமதி 26 சதவீதம் குறைந்து 1,57,850 டன்னிலிருந்து 1,16,900 டன்னாக குறைந்துள்ளது. இஞ்சி, மிளகாய், சீரகம், மஞ்சள் உள்ளிட்ட இந்திய நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைக்கிறது. இதனால்தான் அளவின் அடிப்படையில் ஏற்றுமதி சரிவடைந்துள்ள நிலையிலும், ரூபாய் மதிப்பு அடிப்படையில் உயர்ந்துள்ளது. டாலர் அடிப்படையில் 23 சதவீதம் அதிகரித்து 34.23 கோடியிலிருந்து 42.16 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

இலக்கு

நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.6,500 கோடி (145 கோடி டாலர்) மதிப்பிற்கு 5 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில், முதல் காலாண்டில் அளவின் அடிப்படையில் 23 சதவீதமும், ரூபாய் மற்றும் டாலர் மதிப்பு அடிப்படையில் தலா 29 சதவீதமும் ஏற்றுமதியாகியுள்ளது. எனவே, முழு ஆண்டிற்கான இலக்கை எட்ட முடியும் என நறுமண பொருள்கள் வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் அதிக பங்களிப்பை (35 சதவீதம்) கொண்டுள்ள மிளகாய் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 37 சதவீதம் சரிவடைந்து 64,000 டன்னிலிருந்து 40,500 டன்னாக குறைந்துள்ளது. ரூபாய் மதிப்பு அடிப்படையில் இது 6 சதவீதம் மட்டுமே சரிவடைந்து ரூ.387.53 கோடியிலிருந்து ரூ.365.75 கோடியாக குறைந்துள்ளது.

கொத்தமல்லி (தனியா) ஏற்றுமதியில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இது, அளவின் அடிப்படையில் 56 சதவீதம் குறைந்து 17,000 டன்னிலிருந்து 7,500 டன்னாகவும், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 29 சதவீதம் குறைந்து ரூ.61.30 கோடியிலிருந்து ரூ.43.50 கோடியாகவும் குறைந்துள்ளது.

கடந்த நிதி ஆண்டின் முதல் காலாண்டில் 10,800 டன் பூண்டு ஏற்றுமதியாகியுள்ளது. இது, நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் 900 டன்னாக குறைந்துள்ளது. ரூபாய் மதிப்பு அடிப்படையில் இது 88 சதவீதம் சரிவடைந்து ரூ.37.75 கோடியிலிருந்து ரூ.4.60 கோடியாக குறைந்துள்ளது.

மிளகு

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலாண்டில், மிளகு ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 21 சதவீதம் அதிகரித்து 4,750 டன்னிலிருந்து 5,750 டன்னாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ மிளகிற்கு கிடைத்த விலை ரூ.168.35–லிருந்து ரூ.261.52–ஆக

உயர்ந்துள்ளது. இதனையடுத்து, ரூபாய் மதிப்பு அடிப்படையில் மிளகு ஏற்றுமதி சுமார் இரண்டு மடங்கு அதிகரித்து ரூ.79.96 கோடியிலிருந்து ரூ.150.40 கோடியாக உயர்ந்துள்ளது.

சிறிய ஏலக்காய் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 219 சதவீதம் உயர்ந்து 185 டன்னிலிருந்து 590 டன்னாக அதிகரித்துள்ளது. ரூபாய் மதிப்பு அடிப்படையில் 175 சதவீதம் உயர்ந்து ரூ.21.17 கோடியிலிருந்து ரூ.58.19 கோடியாக அதிகரித்துள்ளது.

பெரிய ஏலக்காய்

பெரிய ஏலக்காய் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் மூன்று மடங்கு அதிகரித்து 55 டன்னிலிருந்து 140 டன்னாக உயர்ந்துள்ளது. ரூபாய் மதிப்பு அடிப்படையில் இது 4 மடங்கு அதிகரித்து ரூ.2.89 கோடியிலிருந்து ரூ.11.10 கோடியாக அதிகரித்துள்ளது.

மதிப்பு கூட்டப்பட்ட நறுமண பொருள்கள் ஏற்றுமதி ரூபாய் மதிப்பில் 46 சதவீதம் உயர்ந்துள்ளது.

முதல் காலாண்டில் இஞ்சி ஏற்றுமதியில் அபார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இஞ்சி ஏற்றுமதி 10 சதவீதம் அதிகரித்து 4,300 டன்னாகவும், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 127 சதவீதம் உயர்ந்து ரூ.53.52 கோடியாகவும் அதிகரித்துள்ளது. இது, இஞ்சிக்கு சர்வதேச சந்தைகளில் நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது.

கடந்த ஆண்டில்...

கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் வரலாறு காணாத அளவில் அதிகரித்து இருந்தது. அந்த நிதி ஆண்டில், இதன் வாயிலாக ஈட்டப்பட்ட அன்னியச் செலாவணி 150 கோடி டாலரைத் தாண்டியது. மேலும், அளவின் அடிப்படையில் ஏற்றுமதி 5 சதவீதம் அதிகரித்து 5,25,750 டன்னாகவும், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 23 சதவீதம் அதிகரித்து ரூ.6,840.71 கோடியாக உயர்ந்தது.